**தலைப்பு - 201 - பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

**(அ) நிதி அல்லாச் சொத்துக்கள்**

நிதி அல்லாச் சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியாகையில் வேறு நிறுவனங்களிடமிருந்து கையேற்கப்பட்டிருந்த முறையே 4,000,000 ஆன, ரூபா 6,000,000 ஆன மற்றும் ரூபா 4,500,000 ஆன 03 வாகனங்களின் பெறுமதி நிதி அல்லாச் சொத்துக்களினுள் உள்ளடக்கப்படாமையினால் அப் பெறுமதியினால் நிதி அல்லாச் சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | KA 7159, KI 4781 மற்றும்PA 2741 இலக்கமுடைய 03 வாகனங்களின் முறையே ரூபா 4,000,000, ரூபா 6,000,000 மற்றும் 4,500,000 ஆன பெறுமதிகள் 2022 மே மாதத்தில் CIGAS கணக்கு மென்பொருள் கீழ் கணக்கிடப்பட்டு குறித்த பதிவேடுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அனைத்து வாகனங்களினதும் பெறுமதிகள் முறையாக மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட LI 4418 ஆம் இலக்க லொறி வாகனம் 2021 செப்தெம்பர் 02 ஆந் திகதி பிரதர செயலாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருப்பினும் இது வரையில் நிதி அல்லாச் சொத்துக்களிலிருந்து அகற்றப்படாமை காரணத்தினால் அதன் பெறுமதியான ரூபா 1,176,000 ஆன பெறுமதியினால் நிதி அல்லாச் சொத்துக்கள் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த லொறி வாகனத்தின் ரூபா 1,176,000 ஆன பெறுமதி நிதி அல்லாச் சொத்துக்களிலிருந்து அகற்றப்படுவதற்கு 2022 மே மாதம் CIGAS மென்பொருள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்கள் கணக்குகளிலி-ருந்து அகற்றப்படுவதற் காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |

**2. நிதி மீளாய்வு**

--------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

-------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 50 பிரகாரம், மதிப்பீடு தயாரிக்கும் போது கூடுமான வரையில் சரியாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் செலவின விடயங்கள் 28 இற்குரிய ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டின் இடையே மாறுபாடானது 11 சதவீதம் தொடக்கம் 241 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 21 திகதிய அமைச்சரவை குறிப்பாணை பிரகாரம் செலவினம் மட்டுப்படுத்தல் பிரகாரம் சேமிக்கப்பட்டது. | மதிப்பீடு தயாரிக்கும் போது கூடுமான வரையில் சரியாக தயாரிக்கப்படல் வேண்டுமனெ. |
| **(ஆ)** | மதிப்பீடு நிதியேற்பாடுகளின் நி.பி 66 இன் கீழ் 201-2-10-2205 ஆன செலவின விடயத்திற்காக மாற்றப்பட்டிருந்த ரூபா 280,000 ஆன நிதியேற்பாடு செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | சில் மாதா ஆராமைக்காக மின்சாரம் வழங்குவதற்கு தொடர்புடையதாக மாத்தரை மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருப்பினும் முலடியன பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கட்டுநிதி பெறப்பாடை காரணத்தினால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. | மதிப்பீட்டு நிதியேற்பாடு பயன்பாடு தொடர்பாக கவனத்துடன் மாற்றலுக்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணத்தின் 1646 ஆம் நிதி பிரமாணம். | குறிப்புக்களானது ஒவ்வொரு மாதமும் நிறைவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்குகள் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 1646 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |
| (அ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான வித்தியாசமொன்று காணப்படின் அதை அடையாளப்படுத்துவதற்காக சுற்றறிக்கையின் பிண்ணினைப்பு 01 இல் காண்பிக்கப்பட்டுள்ள போக்குவரத்து சேவைகள் குறிப்பு மாதாந்தம் நிரப்பப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் குறித்த போக்குவரத்து சேவைகள் குறிப்பு நிரப்பப்பட்டு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 02 ஆண்டுகள் தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான கால பகுதிக்குரிய கூட்டுத்தொகை ரூபா 262,686 ஆன கடன் மீதி அறவிடுவதற்கு | சேவையை விட்டுச் சென்ற இரு உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் மரணித்த உத்தியொகத்தரின் | கடன் மீதி தீர்க்கப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

| | |
|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2019 செப்தெம்பர் 01 ஆந் திகதி மரணித்த உத்தியோகத்தரொருவரின் ரூபா 14,330 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மரண பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------

**3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 74.96 செலவிடப்பட்டு களனி ஈரியவெடியவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தசசில் மாதா நிலையம் மற்றும் பயிற்சி நிறுவகத்தின் கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருப்பினும், எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 ஆம் ஆண்டின் கட்டுமான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருப்பினும் 2019 ஆம் ஆண்டு வரை கட்டிடத்தின் வெவ்வேறு கட்டுமான பணிகளுக்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்று நிலை உருவாகியமையினால் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முடியாது போனது. | குறித்த நோக்கங்கள் நிறைவேற்றுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |

**3.2 பெறுகைகள்**

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மகா நாயக்க சரிகாராமய புனரமைப்பு | | |
| (i) ரூபா 16,380,626 ஆன பணம் செலவிடப்பட்டு, பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் மகா நாயக்க சரிகாராமய புனரமைப்பினை மேற்கொள்ளும் தரப்பினரான கடற்படை உடன், புத்தசாசனம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு அல்லது பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் இலங்கை சனநாயக சோசலிச | இரு தரப்பினர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுவதற்கு கலந்துரையாடப்படினும் கடற்படை அவ்வாறான ஒப்பந்தத்திற்காக கைச்சாத்திடாதென உத்தியோகத்தர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டி கோவையின் 8.9.1 வழிக்காட்டியின் பிரகாரம் ஒப்பந்தமொன்றிற்கு உடன்படல் வேண்டுமென. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடியரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 8.9.1 வழிக்காட்டியின் பிரகாரம் எழுத்துமூல ஒப்பந்தத்திற்கு அல்லது இணக்கப்பாட்டிற்கு உடன்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 4.2.2 வழிக்காட்டி பிரகாரம் பெறுகை காலஅட்டவணை தயாரித்திராததுடன் 2021 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த புனரமைப்பு நடவடிக்கைகள் இந்த அறிக்கை திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகை குறிப்பின் பிரதியொன்று பதிலாக முன்வைக்கின்றேன். | பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.2. வழிக்காட்டியின் பிரகாரம் பெறுகை செயன்முறையின் கால வரையறை விபரிக்கப்பட்டு பெறுகை கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென. |
| (ஆ) அறநெறி பாடசாலை புத்தகங்கள் அச்சிடல்<br><br>அரச பெறுகை வழிக்காட்டி யோவையின் 3.2 வழிக்காட்டிக்கு முரணாக போட்டி விலைமனு கோரப்படாது 2021 ஆம் ஆண்டில் அறநெறி பாடசாலை பாட புத்தகங்கள் மற்றும் அறநெறி பாடசாலை விண்ணப்பபடிவங்கள் அச்சிடுவதற்காக அரச அச்சுத் திணைக்களத்திற்கு ரூபா 202,725,279 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலை கருத்திற் கொண்டு விரைவாக மற்றும் நம்பிக்கையுடன் அரச நிறுவனமொன்றிலிருந்து அறநெறி பாடசாலை பாட புத்தகங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் அச்சிடுவதற்காக அரச அச்சுத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி பிரகாரம் போட்டி விலைமனு அழைத்தல் பணிக்கு நடைமுறையை பின்பற்றல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------

சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரம் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மகா நாயக சாரிகாராமய புனரமைப்பு மேற்கொள்கையில் அங்கிருந்த வீட்டு உபகரணங்கள் மற்றும் இன்வென்டரி பொருட்கள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருப்பினும் அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் வைத்துக் கொள்ளாமை காரணத்தினால் பொருட்கள் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் ஏற்படக் கூடுமென | புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற சேதங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ள வீட்டு பொருட்கள் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் மீண்டும் சாரிகாராமயவிற்கு கொண்டுவரப்படுமென மற்றும் | வீட்டு பொருட்கள் மற்றும் இன்வென்டரி பொருட்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் போது சட்டரீதியாக பொருட்களின் பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | கண்டி ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள கட்டில்கள் இன்வென்டரி ஊடாக அவ் உத்தியோகப்பூர்வ இல்லத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | எடுக்கப்படல் வேண்டுமென. |
| (ஆ) | இல 115, விஜேராம வீதி, கொழும்பு 07 இல் அமைந்துள்ள மகா நாயக்க சாரிகாராமய கட்டிடமுள்ள காணியின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மகா நாயக சாரிகாராமய கட்டிடம் அமைந்துள்ள காணி அளவிடுவதற்காக திபிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுத்தல். | காணி சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| (இ) | களனி ஈரியவெடிய தசசில் மாதா நிலையம் மற்றும் பயிற்சி நிறுவகம் நிர்மாணிக்கப்பட்ட காணி திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் வணக்கத்திற்குரிய வெலமிடியாவே குசலதம்ம நாயகவின் விருப்பம் பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் இது வரையில் அக் கையேற்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு சட்டரீதியான உரித்து உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி கையேற்றலுக்கு தொடர்படைய பௌத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் பரிந்துரை காணி அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அறிக்கை களனி பிரதேச செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | காணியை கையேற்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பதவிகளில் 100 வெற்றிடங்கள் காணப்படுகின்றதுடன் அதனுள் 03 பிரதி மற்றும் உதவி ஆணையாளர் பதவிகள், 52 பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளர்கள் பதவிகள், 22 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 12 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் பதவிகள் காணப்பட்டன. எவ்வாறாயினும், அவ் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு கோரப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |